DMC-CUM-COURT, KUNNAM

# DEPOSITION OF WITNESS

## IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM

| **C.C.No. 138 /2023, Mangalamedu P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கலையரசி | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | குழந்தைசாமி | Occupation | : | மின்வாரியத்துறையில் மேற்பார்வையாளர் தற்போது ஓய்வு |
| Village | : | திருமாந்துறை | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 61 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 16.09.2025. | | | | | |

எதிரி ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிர்வாக மேற்பார்வையாளராக பணி புரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். விபத்து சம்பவத்தில் அடிப்பட்டு இறந்துபோன குழந்தைசாமி என் கணவர். கடந்த 10.06.2019 ம் தேதி திருமாந்துறையில் உள்ள என் வீட்டில் இருந்து தொழுதூருக்கு காய்கறி வாங்குவதற்காக நானும் என் கணவரும் ஷேர் ஆட்டோ மூலம் மாலை சுமார் 6, 6.30 மணியளவில் சென்று காய்கறி வாங்கி கொண்டு இரவு 8.30, 8.40 மணிபோல இருக்கும். நானும் என் கணவரும் ஷேர் ஆட்டோ மூலம் திருமாந்துறையில் உள்ள துபாய் பிரியாணி கடை அருகே வந்து இறங்கி வீட்டிற்கு செல்வதற்காக நானும் என் கணவரும் நின்று கொண்டிருந்தோம். எனது வீட்டிற்கு செல்வதற்கு கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சாலையை கடந்து செல்ல வேண்டும்.

2. என் கணவர் கையில் காய்கறி பையுடன் நின்று கொண்டிருந்தார் அவருக்கு பின்னால் நான் 2 அடி தள்ளி நின்று கொண்டிருந்தேன். அப்போது சென்னையில் இருந்து திருச்சி நோக்கி வந்த சுவராஜ் மஸ்தா மினி லாரி வேகமாக வந்து எனக்கு முன்பாக நின்று கொண்டிருந்த என் கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அவருக்கு தலை, முகம், கை, கால் ஆகிய இடங்களில் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய அந்த மினி லாரி அந்த இடத்தில் நின்றது. விபத்து ஏற்படுத்திய மேற்படி வாகனத்தின் பதிவு எண். TN 38 AB 8384 ஆகும். மேற்படி வாகனத்தை ஓட்டுனரை நான் பார்த்தேன். அவரை நேரில்

பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். ( எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை) அவரது பெயர் இசக்கியப்பன் என்று தெரிந்து கொண்டேன். விபத்தில் இறந்துபோன என் கணவரின் உடலை உறவினர்கள் வந்த பிறகு பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். 11.06.2019 ம் தேதி காலை மங்களமேடு காவல் நிலையம் சென்று விபத்து பற்றி புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.( **சாட்சியால் அளிக்கப்பட்ட புகார் மனு அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) வழக்கு சம்பவம் பற்றி போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

1. தற்போது நான் நீதிமன்ற விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலிசார் விசாரணையிலும், புகார் மனுவிலும் சொன்னேன் என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் உள்ள அ.சா.ஆ1 புகார் மனுவில் தற்போது நீதிமன்றதில் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தவிர மிகைப்படுத்தி சொல்லி இருந்தாலோ அல்லது எழுதாமல் விட்டிருந்தாலோ அ.சா.ஆ 1 புகார் மனு நான் கொடுத்தது அல்ல என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலோ அல்லது புகார் மனுவிலோ எதிரியின் எதிரி பெயர், மற்றும் முகவரி மற்றும் அவரது அடையாளங்கள் மற்றும் சம்பவ இடத்தில் எதிரியை பார்த்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. விபத்துக்கு பிறகு எதிரியை என்னிடம் காண்பித்து அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலோ நான் கொடுத்த புகார் மனுவிலோ எதிரியின் பெயர் இசக்கியப்பன் என்று எப்படி தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த 10 நிமிடத்தில் போலிசார் அங்கு வந்துவிட்டார்களா என்றால் ரோந்து போலிசார் தான் வந்தார்கள். மங்களமேடு போலிசார் வரவில்லை. அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு வந்த ரோந்து போலிசார் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரை அழைத்து சென்று காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டார்கள் என்றால் சரிதான்.

3. சம்பவம் நடந்த உடனே அருகில் உள்ள கடைகளில் வேலை செய்யக்கூடிய ஊழியர்கள் மற்றும் எனது உறவினர்கள், திருமாந்துறை டோல் பூத்தில் வேலை பார்க்கும் ஊழியர்கள் அனைவரும் அங்கு கூடிவிட்டார்கள் என்றால் பொதுமக்கள் மற்றும் எனது உறவினர்களும் கூடிவிட்டார்கள். டோல் பூத்தில் இருந்து வந்தார்களா என்றால் எனக்கு

DMA UMURUGAKUMAR

தெரியவில்லை. டோல் பூத்தில் இருந்து விபத்து நடந்த இடம் 20 ழூ30 அடி தொலைவு இருக்கும் என்றால் சரிதான். டோல்பூத்தின் இருபகுதியிலும் சி.சி.டி.வி கேமரா பொறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மறுநாள் காவல் நிலையம் சென்று என் கைப்பட புகார் மனு எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரிதான்.

4. புகார் மனு எழுதியுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றால் சரியல்ல. எதிரியை நான் சம்பவ இடத்தில் நான் பார்க்கவும் இல்லை, என்றாலும் அவர் அன்றைய தினம் வாகனத்தை ஓட்டவில்லை என்றாலும், அதன் விளைவாக என் கணவர் இறக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

5. வழக்கில் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ள அம்பிகாபதி உறவினரா என்றால் இல்லை. பக்கத்து வீட்டுக்காரர். விபத்துநடந்து 10 நிமிடங்கள் கழித்துதான் அவர் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரியல்ல. அவரும் அந்த இடத்தில் எங்களுடன் நின்று பேசிக்கொண்டிருந்தார். அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதால் எனது கணவரின் இறப்பிற்கு நஷ்ட ஈடு பெறவேண்டி ஒரு பொய் புகார் கொடுத்து அதனடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC, MUNICIPAL COURT, KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 138 /2023, Mangalamedu P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அம்பிகாபதி | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | சின்னப்பிள்ளை | Occupation | : | டைலர் |
| Village | : | திருமாந்துறை | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 60 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 16.09.2025. | | | | | |

எதிரி ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டைலராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1, கலையரசி மற்றும் விபத்தில் இறந்துபோன குழந்தைசாமி ஆகியோரை தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள். கடந்த 10.06.2019 ம் தேதி இரவு சுமார் 8.30,8.45 மணியளவில் நான் திருமாந்துறையில் உள்ள துபாய் பிரியாணி கடை முன்பாக சாலையை கடப்பதற்காக நின்று கொண்டிருந்தேன். என்னுடன் விபத்தில் இறந்துபோன குழந்தைசாமி, மற்றும் அவரது மனைவி கலையரசி ஆகியோரும் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது குழந்தைசாமி சாலையை கடப்பதற்காக ஒரு அடி எடுத்து வைத்தார், அப்போது சென்னையில் இருந்து திருச்சி நோக்கி வந்த ஒரு மினி லாரியின் ஓட்டுநர் வேகமாக வந்ததால் குழந்தைசாமி சாலையை கடக்க முயன்றதை கவனிக்காமல் வந்து அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அதில் குழந்தைசாமிக்கு உடல் முழுவதும் அடிப்பட்டு அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். விபத்தை ஏற்படுத்திய வாகனம் சம்பவ இடத்தில் இருந்து நேராக காவல் நிலையம் சென்றுவிட்டதாக தெரிந்து கொண்டேன். மேற்படி வாகனத்தின் பதிவு எண். TN 38 8384 என்பதை மறுநாள் மங்களமேடு காவல் நிலையம் சென்றபோது அங்கு மேற்படி வாகனம் நின்றதால் பதிவு எண்ணை தெரிந்து கொண்டேன். விபத்தை ஏற்படுத்திய மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் பெயர் தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :–

DMC CUM JM COURT KUNNAM

1. விபத்தைஏற்படுத்திய வண்டி நிற்காமல் நேராக காவல் நிலையம் சென்றுவிட்டது என்றால் சரிதான். மறுநாள் காவல் நிலையம் சென்றபோது அங்கு நின்ற வாகனம்தான் விபத்தை ஏற்படுத்தியது என்று போலிசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான்.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC CUM COURT, KUNNAM

DMCUM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 138 /2023, Mangalamedu P.S. PW -3.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பால் ஜெயபிரகாஷ் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | அருள்தாஸ் | Occupation | : | பிசினஸ் |
| Village | : | வேலூர் | Religion | : | - |
| Taluk | : | வேலூர் | Age | : | 44 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 16.09.2025. | | | | | |

எதிரி ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சுயமாக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 கலையரசி மற்றும் விபத்தில் இறந்துபோன குழந்தைசாமி ஆகியோர் என் மாமியார் மாமனார் ஆவார்கள். கடந்த 06.10.2019 ம் தேதி நான் வேலூரில் இருந்தபோது இரவு 9.00 மணிபோல என் மாமியார் கலையரசி எனக்கு போன் செய்து திருமாந்துறையில் உள்ள துபாய் பிரியாணி கடை முன்பாக சாலை விபத்து ஏற்பட்டு மாமனார் குழந்தைசாமி இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் உடனே கிளம்பி அதிகாலை 3 மணிக்கு அங்கு வந்தேன்.

2. சுவராஜ் மஸ்தா மினி லாரி மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதன் பதிவு எண். TN 38 AB 8384 எனவும் தெரிந்து கொண்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை விபத்து நடந்த மறுநாள் 07.10.2019 ம் தேதி காலை சுமார் 9 மணிபோல விபத்து நடந்த இடத்தில் வைத்து மங்களமேடு போலிசார் வந்து விசாரித்து சம்பவ இடத்தை பார்த்து குறித்து கொண்டு சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நானும் என் சகலை லட்சுமணன் ஆகிய இருவரும் மேற்படி பார்வை மகசர் ஆவணத்தில் சாட்சி கையொப்பங்கள் செய்தோம். (**சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்ட 11.06.2019 ம் தேதியிட்ட பார்வை மகசர் ஆவணம் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்பவம் தொடர்பாக போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :–

1. போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து சாட்சி கையெழுத்து போட சொல்லி எழுதி வைத்திருந்த பேப்பரில் என்னால் கையொப்பம் செய்யப்பட்டது என்றால் சரிதான். சென்னை டூ திருச்சி செல்லும் சாலையில் மையப்பகுதியில் விபத்து ஏற்பட்டதற்கான அடையாளம் இருந்தது என்றால் சரிதான். நான் விபத்து பற்றி விசாரித்தபோது சென்னை டூ திருச்சி செல்லும் சாலையில் எனது மாமனார் சாலையை கடக்கும்போது சாலையின் மையப்பகுதியில் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ 2 பார்வை மகசர் என் முன்னிலையில் சம்பவ இ டத்தில் தயார் செய்யப்பட்டது அல்ல என்றாலும் போலிசார் காவல் நிலையத்தில் வைத்துதான் தயார் செய்தார்கள் என்றாலும் நான் கையொப்பம் செய்த பார்வை மகசர் அல்ல என்றாலும் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JM COURT, KUNNAM

DM COURT, KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 138 /2023, Mangalamedu P.S. PW -4.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | லட்சுமணன் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | எல்லப்பன் | Occupation | : | மின்சார வாரியம் உதவி செயற்பொறியாளர் |
| Village | : | நெசப்பாக்கம் | Religion | : | - |
| Taluk | : | சென்னை | Age | : | 48 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 16.09.2025. | | | | | |

எதிரி ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மின்சார வாரியத்துறையில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 கலையரசி மற்றும் விபத்தில் இறந்துபோன குழந்தைசாமி ஆகியோர் என் மாமியார் மாமனார் ஆவார்கள். கடந்த 10.06.2019 ம் தேதி நான் சென்னையில் வீட்டில் இருந்தபோது இரவு 9.00 மணிபோல என் மைத்துனர் ராஜ்குமார் எனக்கு போன் செய்து திருமாந்துறை கைகாட்டியில் உள்ள நியூ துபாய் பிரியாணி கடை முன்பாக சாலை விபத்து ஏற்பட்டு அவரது அப்பா குழந்தைசாமி இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் உடனே கிளம்பி அதிகாலை 2,2.30 மணிபோல அங்கு வந்தேன்.

2. சுவராஜ் மஸ்தா மினி லாரி மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதன் பதிவு எண். TN 38 AB 8384 எனவும் தெரிந்து கொண்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை விபத்து நடந்த மறுநாள் 11.06.2019 ம் தேதி காலை சுமார் 9 மணிபோல விபத்து நடந்த இடத்தில் வைத்து மங்களமேடு போலிசார் வந்து விசாரித்து சம்பவ இடத்தை பார்த்து படம் வரைந்து எழுதி குறித்து கொண்டு சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நானும் என் சகலை பால் ஜெயப்பிரகாஷ் ஆகிய இருவரும் மேற்படி பார்வை மகசர் ஆவணத்தில் சாட்சி கையொப்பங்கள் செய்தோம். வழக்கு சம்பவம் தொடர்பாக போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி  தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

போலிசார் வரைந்த வரைபடத்தில் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் கையெழுத்து போட்டேன் எத்தனை என்று தெரியவில்லை. நான் கையொப்பம் செய்த வரைபடத்தில் தான் பால் ஜெயக்குமாரும் கையெழுத்து செய்தார் என்றால் சரிதான். பால் ஜெயப்பிரகாஷ் கையொப்பம் செய்த அன்றைய தினம் தான் நானும் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ 2 பார்வை மகசர் என் முன்னிலையில் சம்பவ இ டத்தில் தயார் செய்யப்பட்டது அல்ல என்றாலும் போலிசார் காவல் நிலையத்தில் வைத்துதான் தயார் செய்தார்கள் என்றாலும் நான் கையொப்பம் செய்த பார்வை மகசர் அல்ல என்றாலும் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JUMCOURT, KUNNAM